RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s172

# சிலப்பதிகாரத்தில் கொற்றவை வழிபாடும் எயினர்களின் வாழ்வும்

**இ. சரண்யா தேவி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்- 626001, தமிழ்நாடு, இந்தியா

# The Worship of Goddess Kotravai in Silappathikaram and the Life of the Eyinars

**I. Saranya Devi** [a, *]

[a] Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: saranyadevii@vvvcollege.org

Received: 22-03-2022
Revised: 14-10-2022
Accepted: 03-11-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

Kotravai worship is the most important place in the worship of the mother goddess of the ancient Tamils. Kotravai is an ancient goddess. In Sangam literature, Kotravai is referred to by the names Pazhayol, Ganamar Selvi, and Ayirai. Literature indicates that the Eyinars worshipped the Goddess Kotravai. Ilangovadigal in the Madurai chapter has explained in detail the worship of the Kortavai of the Eyinars in the Vettuvavari story. The Eyinars have lived as an ethnic group. The leadership was not mentioned to them. The Eyinars lived as ethnic groups and made their living under the rule of chieftains. It is a fact that the literature suggests the truth that people who were good at hunting in the early times may have turned into murderers and robbers due to poverty. But it is an incontrovertible fact that the Tamil people who lived in ancient times were Eyinars. It can be seen from the Silappathikaram that they have destroyed their own race by sacrificing to the Kotravai.

**Keywords:** Kotravai Worship, Silappathikaram, Goddess, Ancient Tamil.

## முன்னுரை

பழந்தமிழரின் தாய் தெய்வ வழிபாட்டில் மிக இன்றியமையாத இடம் கொற்றவை வழிபாட்டிற்கு வழங்கப்படுகிறது. கொற்றவை என்பது ஒரு பழமையான பெண் தெய்வமாகும். சங்க இலக்கியங்களில் பழையோள், கானமர் செல்வி, அயிரை என்னும் பெயர்களால் குறிப்பிடப்படுகிறாள். எயினர்கள் கொற்றவை தெய்வத்தை வழிபட்டதாக இலக்கியங்கள் சுட்டுகின்றன. இளங்கோவடிகள், மதுரை காண்டத்தில் வேட்டுவவரி காதையில் எயினர்களின் கொற்றவை வழிபாடு குறித்து விரிவாக எடுத்துரைத்துள்ளார். அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் ஆய்வோம்.

## கொற்றவை

கொற்றம் + அவ்வை - கொற்றவ்வை. கொற்றம் என்றால் வெற்றி என்று பொருள். அவ்வை என்றால் அம்மை என்று பொருள். ஆதியில் ஐவகைத் திணைகளில் முதல் திணையாகிய குறிஞ்சி நிலத்திற்குரிய தாய் தெய்வமாகவும் பின்னர் முல்லை நிலத்திற்குரிய தாய் தெய்வமாகவும் கொற்றவை குறித்து இலக்கியங்களில் பல குறிப்புகள் இருந்தாலும் பாலை நிலத்திற்குரிய தாய்த்தெய்வமாக கொற்றவை அடையாளப்படுத்தப்படுகிறாள்.

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் திணைக்கு உரியத் தெய்வங்களை குறிப்பிடும் பொழுது,

“மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்”

என நான்கு நிலத்திற்கும் ஆண் தெய்வங்களையே தலைமைத் தெய்வங்களாகக் குறிப்பிட்டுள்ளார் (Ilampuranar, 2005). தாய்வழிச் சமூகம் மாற்றம் பெற்று தந்தைவழிச் சமூகம் நிலைபெற்றுவிட்ட நிலவுடைமைச் சமூகத்தின் கருத்தாக்கம் பதிவு செய்யப்பெற்றுள்ளது. பழந்தமிழகத்தில் பெருவழக்காயிருந்த கொற்றவை வழிபாடு குறிப்பிடப்படவில்லை. பாலை திணைக்கென்று தனி நிலமில்லை. முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்ததன் விளைவாக அதன் இயல்பான நிலையைக் கதிரவனின் வெம்மை மிகுதியால் தன்னிலை இழந்து உருவான இடமே பாலை என்பதை,

“முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து

நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்

பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”

என்ற வரிகள் மூலம் அறியமுடிகிறது (Puliyur Kesigan, 2015). தொல்காப்பியர் வெட்சிக்குப் புறனடையாகக் கொற்றவை வழிபாட்டினை குறிப்பிடுகின்றார் (Ilampuranar, 2005).

“தொல்காப்பியர் வெட்சித்திணையில் கொற்றவை வழிபாட்டினைக் குறிப்பிடுகின்ற காரணத்தால் வெட்சியின் புறனாகிய குறிஞ்சிக்கும் கொற்றவை நிலை உரியதாகின்றது. கொற்றவைநிலை நூற்பாவிற்கு உரையெழுதும் இளம்பூரணர் கொற்றவைநிலை என்றதனாலே குறிஞ்சிக்கு முருகவேளேயன்றிக் கொற்றவையும் தெய்வம் என்பது பெற்றாம் என்பார் (Ilampuranar, 2005). நச்சினார்க்கினியர் கூடுதலாக, வருகின்ற வஞ்சிக்கும் கொற்றவை நிலை காரணமாயிற்று, தோற்றோர்க்குக் கொற்றம் வேண்டியும் வென்றோர்க்கும் மேற் செல்லுங்காற் கொற்றம் வேண்டியும் வழிபடுவராதலின் என்று விளக்கம் கூறுவர். ஆக நச்சினார்க்கினியர் உரை கொற்றவை நிலையை வெட்சிக்கும் வஞ்சிக்கும் உரியதாகக் குறிப்பிடுவதிலிருந்து வெட்சிக்கும் வஞ்சிக்கும் புறனான திணைகளான குறிஞ்சிக்கும் முல்லைக்கும் கொற்றவைநிலை உரியதாகின்றது. தொல்காப்பியரின் ஒரு புறநடைக் குறிப்பைக் கொண்டு, கொற்றவை வழிபாடு குறிஞ்சிக்கும் முல்லைக்கும் உரிய பழந்தமிழர் வழிபாடு என்பதனை உறுதிசெய்ய முடிகின்றது (Bhakthavatsala Bharathi, 2011).”

தொல்காப்பியத்தில் கொற்றவை நிலை குறித்து,

‘மறங்கடை கூட்டிய துடிநிலை சிறந்த

கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே’

என்று குறிப்பிடுகின்றார் (Ilampuranar, 2005). மாற்றாருடன் போருக்குச் செல்லும் வீரர்கள் வெற்றி வேண்டி கொற்றவையை வணங்கிச் செல்லும் நிலையே ‘கொற்றவை நிலை’ என்பதைத் தொல்காப்பியம் வழி அறியமுடிகிறது.

## கொற்றவை வழிபாடு

எயினர்கள் மறக்குடி பெண் ஒருத்திக்குக் கொற்றவை போன்று தோற்றம் புனைந்தனர். காட்டுப்பன்றியைக் கொன்று பறித்த, அதன் கொம்பினை வெண்மையான பிறை போன்று திருமுடியில் வைத்தனர். புலியின் பற்களைக் கோர்த்து புலிப்பல் தாலியாக அணிவித்தனர். புலித்தோலை

மேகலையாக அணிவித்தனர். கலைமான் மீது அவளை ஏற்றி வைத்தனர். பாவை, கிளி, கானங் கோழி, நீலநிற மயில் பந்து கழங்கு ஆகியவற்றைத் தந்து, அவளைக் கொற்றவையாகக் புனைந்தனர்.

“ஆறெறி பறையும் சூறைச் சின்னமும்

கோடும் குழலும் பீடுகெழு மணியும்

கணங்கொண்டு துவைப்ப அணங்குமுன் நிறீஇ

விலைப்பலி உண்ணும் மலர்ப்பலி - பீடிகைக்

கலைப்பரி ஊர்தியைக் கைதொழுது ஏத்தி”

தாம் புனைந்து வைத்த அக்குமரியையே தேவியாகப் பாவித்துப் போற்றி வழிபட்டனர் (Puliyur Kesigan, 2015). உள்ளேயிருந்த ஐயை பலிபீடத்தை முதலிலே தொழுதனர். பின்னர், கொற்றவையைக் கைதொழுதும் பணிந்து போற்றினர்.

## கொற்றவையின் தோற்றப்பொழிவு

கொற்றவையின் தோற்றப்பொழிவையும் அவளின் சிறப்புக்களையும் எயினர்கள் போற்றி வணங்கினர். கொற்றவையின் தோற்றத்தை எயினர்கள் கேசாதி பாத வருணனையாக வருணித்தனர். மகிடாசுரனைக் கொன்று, அவன் தலை மீது நிற்பவள். தனக்கோர் அந்தம் இல்லாதவள். கருநிறத்தை உடையவள். போரின் அதிதேவதை. அனைத்துலகையும் கருவிலே தாங்கியவள். நீல நிறமுடையவள். திருமாலுக்குத் தங்கையாவாள். அவள் எம் தலைவி என்று எயினர்கள் போற்றிப் பரவினர்.

“பாய்கலைப் பாவை, பைந்தொடிப் பாவை,

ஆய்கலைப் பாவை, அருங்கலப் பாவை,

தமர்தொழ வந்த குமரிக் கோலத்து

அமர்இளங் குமரியும் அருளினள்

வரியுறு செய்கை வாய்ந்ததால் எனவே”

சங்கமும் சக்கரமும் தாமரைக் கையிலே ஏந்திச் சிவந்த கண்களை உடைய சினமிகுந்த சிங்க ஏற்றின் மேல் நின்றாள். கங்கையைச் சடைமுடியிலே அணிந்த கண்ணுதலோனின் இடப் பாகத்திலே மங்கை உருவாக மறைகள் போற்ற விளங்கி நிற்பவளே எம் தாயே என்று எயினர்கள் போற்றுகின்றனர் (Puliyur Kesigan, 2015). எயினர்கள், கொற்றவைக்கு உரிய பலிகடனைச் செலுத்தாவிடில் அவர்களுடைய வில்லினில் போரின் வெற்றியைத் தரமாட்டாள் என்பதால் தன்னுடைய வெற்றிக்கு விலையாகக் கொற்றவைக்கு உரிய பலிகடனைச் செலுத்தினர்.

## எயினர்கள்

எயினர்கள் வாழ்விடம் பாலையென்பதால் அந்நிலத்தில் வாழும் உயிரினங்களை வேட்டையாடும் இயல்பினைக்கொண்டவர்கள். தொடக்கக்காலத்தில் எயினர்கள் வறுமையான நிலையிலும் செம்மையாக அவற்றிலும் பிறருக்கு உதவிவாழும் நல்வாழ்வினை மேற்கொண்டனர். பிற்காலத்தில் பலரைத் துன்புறுத்தும் கொலைகளை மேற்கொண்டிருக்கலாம். எயினர்கள் ஓர் இனக்குழுவினராக வாழ்ந்துள்ளனர்.இவர்களுக் கென்று தலைமை சுட்டப்படவில்லை.

வேட்டைச் சமூகத்தவரான எயினர்கள் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தனர் என்ற செய்தியைச் சங்க இலக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன. விருந்தோம்பல் இம்மக்களின் தலையாய பண்பாக விளங்கியது. அது மட்டுமன்று, இருப்பது எதுவாயினும் அதனை எல்லாரும் சமமாகப்பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்பது இம்மக்களின் சீரிய பண்பாக மிளிர்ந்தது.

தம் இல்லம் நாடி வந்த பாணர் முதலிய விருந்தினரை இன்முகத்தினராக வரவேற்று உபசரித்து மகிழ்ந்தனர். பசி நீங்க உணவளித்துப் போற்றினர். தம்மிடம் இருந்தது எதுவாயினும் அதனை விருந்தினர்க்குப் பகிர்ந்தளித்துப் பசிபோக்கினர். பகிர்ந்துண்ணும் பண்பை இயல்பாகவே பெற்றிருந்த எயினர்குடிப்பெண்கள் விருந்தோம்பலில் தலைசிறந்து விளங்கினர். எயின்குடியினரின் இச்சீரியபண்புக்கு அவர்கள் வாழ்ந்த சமூக அமைப்பே காரணம் ஆகும். அவர்கள் ஆதி பொதுவுடைமை வகைப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

கள் விற்பவள் காசின்றிக் கள் ஊற்ற மறுத்ததால் வெட்சி மறவன் வில்லேந்தி பகைவருடைய ஆநிரைகளைக் கவரச்செல்வான். புள் நிமித்தமும் ஒத்துப்போகப் பகைவருடைய ஆநிரைகளைக் கவருவான். அவனுக்குக் கொற்றவை துணையாகச் செல்லும்.

## ஆநிரை கவர்தலும் பங்கிடுதலும்

எயினன் போரிலே கவர்ந்து வந்த நல்ல ஆநிரைகளை கொல்லன், துடியன், பாணன், கள்விற்பவள், உளவறிந்து கூறும் கானவன், புள் நிமித்தம் சொன்ன கணி ஆகியோருக்குப் பகிர்ந்தளிக்கின்றான். மேலும் தன்னுடைய குடியில் வயது முதிர்ந்த எயினர் மற்றும் எயிற்றியர்களுக்கும் பசுக்கூட்டங்களைப் பகிர்ந்தளிக்கின்றான்.

“கரந்தை அலறக் கவர்ந்த இனநிரைகள்

கள்விலை யாட்டி, நல் வேய்தெரி கானவன்,

புள்வாய்ப்புச் சொன்ன கணி, முன்றில் நிறைத்தன.

கயமலர் உண்கண்ணாய்! காணாய்! நின் ஐயர்

அயல் ஊர் அலற, எறிந்தநல் ஆன் நிரைகள்,

நயன்இல் மொழியின் நரைமுது தாடி

எயினர், எயிற்றியர், முன்றில் நிறைந்தன!”

போரில் கிடைத்த செல்வத்தைத் தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் பிறருக்குக் கொடுத்து உதவும் எயினர்களின் மேன்மையான உள்ளத்தினை அறியமுடிகிறது (Puliyur Kesigan, 2015).

## பலிகடன்

எயினர்கள் போரில் வெற்றி பெற்றவுடன் கொற்றவைக்குச் செலுத்த வேண்டிய பலிகடனைச் செலுத்துகின்றனர். தங்களுடைய கழுத்தை அறுத்து அதிலிருந்து வரும் குருதியை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றனர்.

“இட்டுத் தலை எண்ணும் எயினர்”

“அடல்வலி எயினர்நின் அடிதொடு கடனிது

மிடறுஉகு குருதி, கொள் விறல்தரு விலையே!”

என்ற பா அடிகள் வழி எயினர்கள் தங்களுடைய தலையைத் தாங்களே அறுத்து கொற்றவைக்குப் பலி கொடுப்பது புலனாய்கிறது. இத்தகைய அவிப்பலியால் எயினர் இனம் அழிந்திருக்கக்கூடும் (Puliyur Kesigan, 2015).

## முடிவுரை

எயினர்கள் ஓர் இனக்குழுவினராக வாழ்ந்துள்ளனர். இவர்களுக்கென்று தலைமை சுட்டப்படவில்லை. எயினர்கள் இனக்குழுவினராக வாழ்ந்து குறுநில மன்னர்களின் ஆளுகைக்கு

உட்பட்டுத் தங்கள் வாழ்வினை மேற்கொண்டுள்ளனர். தொடக்கக்காலத்தில் வேட்டைத்தொழிலும் வறுமையாக இருந்தாலும் செம்மையாக இருந்தோர் பிற்காலத்தில் வறுமையால் கொலை கொள்ளையென மாறியிருக்கலாம் என்பது இலக்கியங்கள் உணர்த்தும் உண்மையாகும், ஆனால் பண்டையகாலத்து வாழ்ந்த தமிழ்க்குடி எயினர்கள் என்பது மறுக்க இயலா உண்மையாகும். கொற்றவைக்குப் பலி கொடுப்பதன் வழி தங்கள் இனத்தைத் தாங்களே அழித்துக் கொண்டவர்கள் என்பது சிலப்பதிகாரத்தின் வழி அறிய முடிகிறது.

## References

Bhakthavatsala Bharathi, S. (2011) Panpaattu Manudaviyal, Meiyappan Pathipagam, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Puliyur Kesigan, (2015) Silapathikaram, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License